தினமணி

# மேட்டூர் அணையை ஜூன் 1-ல் திறக்க வலியுறுத்தல்

First Published : 16 May 2011 04:21:46 AM IST

திருச்சி, மே 15: மேட்டூர் அணையை ஜூன் 1-ம் தேதி திறக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு மாநிலத் தலைவர் எஸ். பவன்குமார்.

திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை அவர் அளித்த பேட்டி:

அண்மையில் பெய்த கோடை மழையால் பல இடங்களில் குறுவை நாற்று விடும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதனால், குறுவை சாகுபடிக்கு உடனடியாகத் தண்ணீர் தேவைப்படுகிறது.

இப்போது, மேட்டூர் அணையிலும் சுமார் 113 அடி உயரத்துக்குத் தண்ணீர் உள்ளது. எனவே, ஜூன் 12-ம் தேதிதான் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்றிருக்காமல், ஜூன் 1-ம் தேதி அல்லது அதற்கு முன்பாகவே தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விளை நிலத்தை வளர்ச்சி என்ற பெயரில் கொள்ளையடிப்பதைத் தடுப்பதற்கு சட்டம் இயற்ற வேண்டும். குறிப்பாக, ரியல் எஸ்டேட் வணிகத்துக்கு விளை நிலத்தைக் கொடுக்கக் கூடாது.

குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களில் கடைப்பிடிக்கப்படுவதுபோல விவசாய அட்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே விளை நிலத்தை வாங்க முடியும் என்ற சட்டத்தை தமிழகத்திலும் அமல்படுத்த வேண்டும்.

அதேநேரம், மக்களுக்கு வீடு இல்லை என்ற பிரச்னையும் ஏற்பட்டுவிடக் கூடாது. எனவே, வெளிநாடுகளிலும், நம் நாட்டில் பெரு நகரங்களிலும் உள்ளதுபோல அடுக்குமாடிக் குடியிருப்புகளை ஏற்படுத்த வேண்டும். அதாவது, வளர்ச்சியை அகலத்தில் கொண்டு போகாமல் உயரத்தில் கொண்டு செல்ல வேண்டும். இதன்மூலம், எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

கடலூர், விழுப்புரம், அரியலூர் மாவட்டங்களில் முந்திரி மரங்கள் முழுவதும் காய்ந்து பயனில்லாத நிலையில் உள்ளன. இதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

அடுத்த தலைவர்...: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக யார் வேண்டுமானாலும் வரலாம். ஆனால், தலைவராக வருபவர் தொலைநோக்குப் பார்வையுடனும், கோஷ்டி பாராமல் அனைவரையும் அரவணைத்துச் செல்பவராகவும் இருக்க வேண்டும்.

மேலும், தொண்டர்கள் சொல்லும் கருத்துகளை ஏற்றுக் கொள்பவராக இருக்க வேண்டும். கட்சியின் வளர்ச்சியை பிரதான குறிக்கோளாகக் கொண்டிருப்பவர் அவசியம் தேவை. மக்கள் பிரச்னைகளுக்கு தீர்வு காண காங்கிரஸ் மேலிடம் உண்மையில் அக்கறையுடன் இருக்கிறது. அதற்கேற்றவாறு மாநிலத் தலைவர் இங்குள்ள நிலைமைகளைச் சரியாக எடுத்துக் கூறுபவராக இருக்க வேண்டும் என்றார் பவன்குமார்.

பேட்டியின் போது காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு மாநிலத் துணைத் தலைவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாவட்டத் தலைவர்கள் ஜி.கே. முரளிதரன் (திருச்சி மாநகர்), கே.ஆர். ரவி (திருச்சி புறநகர்) உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

---

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

**வேளாண்மையில் தொழில்நுட்பம் அவசியம்:பல்கலை துணைவேந்தர் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : மே 15,2011,23:25 IST

கோவை : ""வேளாண் மேம்பாட்டுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் அவசியம்," என, கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் பேசினார்.விதைத் தர நிர்ணயம் மற்றும் பயிர்களில் பூச்சி நோய் கண்டறிதல் குறித்த சர்வதேச பயிற்சி முகாமின் துவக்க விழா, கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. தொடர்ந்து ஆறு மாதம் நடக்கும் இப்பயிற்சி முகாமில் ஆப்கானிஸ்தான் நாட்டின் பயிர்பாதுகாப்பு மற்றும் பயிர் நோய் தொற்று காப்பு துறையை சார்ந்த ஐந்து பணியாளர்கள் பங்கேற்கின்றனர்.பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி துவக்கி வைத்து பேசிதாவது:இந்தியா போல் ஆப்கானிஸ்தானிலும் 80 சதவீத மக்கள் வேளாண் தொழிலை சார்ந்துள்ளனர். அதன் அடிப் படையாக வேளாண்மையில் நவீன வேளாண் தொழில்நுட்பங்களை கையாள வேண்டும். இதன் முதல் கட்டமாக ஆப்கானிஸ் தான் விஞ்ஞானிகளும், தொழில் நுட்ப வல்லுனர்களும் முதலில் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகளை

பெற்று, பிறகு அந்நாட்டு விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க வேண்டும். பயிற்சியாளர்களுக்கு விதைத்தர நிர்ணய முறைகள், விதை உற்பத்தி, விதை விற்பனை மேம்பாடு, விதைத் தூய்மை மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சிநோய் மேலாண்மை மற்றும் பயிர்ச்சத்து மேலாண்மை போன்றவை சார்ந்த தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளன. இந்தியாவில் 200க்கும் மேற்பட்ட பூச்சிகள், நூற்றுக்கணக்கான நோய்கள் ,களைப் பயிர்கள், பலவகையான நூற்புழுக்கள் பயிர்களை சேதப்படுத்துகிறது. பூச்சி மற்றும் நோய்களின் மூலமாக ரூ.5000 கோடி மதிப்புடைய 30 சதவீத அளவு பயிரிழப்பு ஏற்படுகிறது. விதையானது அதிக தூரத்துக்கு நோய்களை பரப்பும் காரணியாக கருதப்படுகிறது.இந்தியாவில் உருளைக்கிழங்கு பயிரை அதிகமாக தாக்கும் பொன்னிற முட்டைக்கூடு நூற்புழுவானது, இங்கிலாந்து தேசத்திலிருந்து ஊடுருவியுள்ளது. எனவே, விதைத்தர நிர்ணய முறை மூலம் தரமான விதைகளை பயன்படுத்துவது, விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தும் முக்கியமான அடித்தளமாக அமையும். 1966ல் விதைச் சட்டத்தை இந்தியா நடைமுறைப்படுத்தி விதை தரம் மற்றும் விவசாயிகளுக்கு விதை விற்பனை செய்யும் முறையை ஒழுங்குப்படுத்தியுள்ளது.பல்கலை பயிர்பாதுகாப்பு இயக்குனர் ஜோனத்தன் பேசுகையில்,"" ஊடுருவிய நோய், பூச்சி மற்றும் நூற்புழுக்களால், பல்வேறு பிரச்னைகளை இந்தியா சந்தித்து வருகிறது. கரும்பில் கம்பளி அசுவுணிப் பூச்சி மவுரீசியஸ் நாட்டிலிருந்தும், உருளையில் பின் இலைக் கருகல் நோய் அயர்லாந்திலிருந்தும், காப்பியின் துரு நோய் இலங்கையிலிருந்தும் இந்தியாவுக்கு ஊடுருவி யுள்ளது. இது போன்ற பூச்சி நோய்கள் இந்தியாவுக்குள் ஊடுருவாமல் தடுக்க பயிர் நோய் தொற்று காப்பினை வலுப்படுத்துவது அவசியம்," என்றார்.தாவர நோயியல் பேராசிரியர் பிரபாகர், தாவர நோயியல் துறை தலைவர் சந்திரசேகர், பயிற்சியின் துணை இயக்குனர் ரகுசந்தர் மற்றும் பேராசிரியர்கள் உட்பட பலர் உரையாற்றினர்.

---

**நுங்கு வரத்து குறைவுவிலை கடும் உயர்வு**

பதிவு செய்த நாள் : மே 14,2011,01:48 IST

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில், செங்கல் சூளைக்காக பனை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டதால், நுங்கு உற்பத்தி குறைந்துள்ளது. வரத்து குறைந்ததால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது.
ஆண்டு தோறும் மார்ச் மாதத்தில் துவங்கும் கோடை வெயில் தாக்கம், ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதம் வரை நீடிக்கிறது. சுட்டெரிக்கும் கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்க, "நுங்கு' வாங்கி சுவைப்பதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஏப்ரல் மாதத்தில் துவங்கி மே மாதம் இறுதிவரை, பனைமரத்தில் இருந்து "நுங்கு' அறுவடை செய்து, நகர்ப்புறங்களில் விற்பனை செய்கின்றனர்.

வாழப்பாடி பகுதியில் சிங்கிபுரம், சோமம்பட்டி, மன்னாயக்கன்பட்டி, துக்கியாம்பாளையம், ராஜாபாளையம் உள்ளிட்ட பெரும்பாலான பகுதியில் தரிசு நிலங்களிலும், புன்செய் நிலங்களின் வரப்பு ஓரங்களிலும் பனை மரங்கள் நிறைந்து காணப்பட்டன. செங்கல் சூளைகளுக்கு தகுந்த எரிபொருளாக பயன்படுவதால் கடந்த பத்தாண்டுகளாக, ஏராளமான பனை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன.
அதனால், வாழப்பாடி பகுதியில் நுங்கு உற்பத்தி பெருமளவில் குறைந்து விட்டது. சுவைக்க விரும்புவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், விற்பனைக்கு வரத்து குறைந்ததால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.விவசாயிகளும், கூலித்தொழிலாளர்களும், பெட்ரோல் பங்க், பயணியர் மாளிகை, தாலுகா அலுவலகம் என, பொதுமக்கள் கூடும் இடங்களில் நுங்கு விற்பனை செய்கின்றனர். நுங்கு காய்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால், ஒரு கண் நுங்கு அதிகபட்சமாக 3 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

---

**பூத்துக் குலுங்கும்சரகொன்றை பூ**

பதிவு செய்த நாள் : மே 14,2011,01:36 IST

இடைப்பாடி: இடைப்பாடி அருகே கண்ணாங்காடு பகுதியில், ரோட்டின் இருபுறத்திலும் ஏராளமான சரகொன்றை மரங்கள் உள்ளது. இந்த மரங்கள், கோடை காலத்தில் பூக்கும் சீதோஷ்ண நிலை பெற்றது.
தற்போது கோடைகாலம் முடியும் தருவாயில், பூலாம்பட்டி செல்லும் ரோட்டில் கண்ணாங்காடு பகுதியில், ரோட்டின் இருபுறத்திலும் உள்ள சரகொன்றை மரத்தில் மலர்ந்துள்ள சரகொண்டை பூக்கள், இலைகளே தெரியாத அளவுக்கு மரம் முழுவதும் சிவப்பு நிறத்தில் காட்சி தருகிறது. இது, அந்த வழியாக செல்லும் பயணிகளுக்கு கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது

---

**கேரள பலா பழம் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : மே 14,2011,01:31 IST

சேலம்: கேரளாவில் இருந்து, சேலத்துக்கு பலாப்பழங்கள் வரத்து துவங்கியுள்ளது.கேரள மாநிலத்தில் உள்ள மலப்புரம், திருச்சூர், சாலக்குடி, மாளா, தெரம்பாவூர், பட்டாணி, ஒத்தப்பாலம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் பலாப்பழங்கள் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து, தமிழகம் மட்டுமின்றி வட மாநிலங்களுக்கும் பலாப்பழங்கள் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.சேலத்துக்கு, இரண்டு நாட்களாக பலாப்பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. ஒரு மாதத்துக்கு முன்பே பலாப்பழங்களின் வரத்து இருந்திருக்க வேண்டும். ஆனால், கடந்த இரண்டு நாட்களாகத்தான், பலாப்பழங்கள் வரத்து உள்ளது.
திருமண விழாக்களின் போது, விருந்து பரிமாறும் இலைகளில் மா, பலா, வாழை போன்ற முக்கனிகள் வைப்பதை, சேலம் பகுதி மக்கள், கடந்த சில ஆண்டுகளாக கடைபிடித்து வருகின்றனர்.

கேரள பழங்கள் மிகுந்த சுவையுடன் இருக்கும். பண்ருட்டி பழங்கள் இங்கு வருவது மிகவும் குறைவு. சுவையும் குறைவு என்கின்றனர் பலாப்பழ பிரியர்கள். பலாப்பழத்தில் இருந்து அல்வா, பாயாசம், சிப்ஸ் ஆகியவை செய்ய முடியும். பிஞ்சு பலா காய்களில்

கூட்டு, பொரியல் போன்றவை செய்யலாம்.சேலம், சத்திரம் பலாப்பழங்கள் மொத்த வியாபாரி ஆஜாசாதிக் கூறியதாவது:சேலத்துக்கு தினமும் பத்து லாரிகளில் பலாப்பழங்கள் வருகின்றன. ஒரு லாரியில் குறைந்தபட்சம், 1,000 பழங்கள் வருகின்றன. ஐந்து கிலோ முதல் 25 கிலோ எடை வரை பழங்கள் உள்ளன. குறைந்தபட்சம், 30 முதல் 150 ரூபாய் வரை விற்பனை செய்கிறோம். தற்போது, கேரளாவில் இருந்து அதிகளவு பலாப்பழங்கள் வருகின்றன. வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அப்போது, விலையும் குறையும். இங்கு வரும் பலாப்பழங்கள் மேச்சேரி, தாரமங்கலம், மேட்டூர், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், தலைவாசல், திருச்செங்கோடு, நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

---

**தென்னையில் கோகோ ஊடுபயிர்: தோட்டக்கலைத்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 16,2011,01:50 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஊடுபயிராக, கோகோ பயிரிட்டு அதிக லாபம் பெறலாம், என தோட்டக்கலை துறை அறிவுறுத்தியுள்ளது. சாக்லேட் மற்றும் ஊட்டச்சத்து பானங்கள் தயாரிப்பதற்கு முக்கிய மூலப்பொருளாக கோகோ பயன்படுத்தப்படுகிறது. இதன் தேவை, இந்திய உற்பத்தியை விட அதிக அளவில் உள்ளதால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. கோகோ பயிர் தென்னை மற்றும் பாக்கு தோட்டங்களில் ஊடுபயிராகவும், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித்தரும் பயிராகவும் உள்ளது. இந்தியாவில் கோகோ சாகுபடி கடந்த 1970ம் ஆண்டு துவங்கியது. கேரளா, கர்நாடகா, ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழகம் போன்ற மாநிலங்களில் கோகோ அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்தில், 7,500 ஹெக்டேரில் கோகோ சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டுக்கு, 250 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. தென்னைக்கேற்ற சிறந்த ஊடுபயிர் கோகோ. இவற்றை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 3 முதல், 45 ஆண்டு வரை பலன் தருவதோடு மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்கிறது. கோகோவின் மக்கிய இலைகள் மூலம், 1,000 கிலோ வரை ஹெக்டேருக்கு மண்ணில் அங்ககச்சத்து கூடுகிறது. கோகோ பழ ஓடு உரமாகவும்,

கால்நடை தீவனமாகவும் பயன்படுகிறது. ஒரு ஹெக்டேரில் கோகோ சாகுபடி செய்தால், 20 ஆயிரம் முதல், 25 ஆயிரம் ரூபாய் வரை கூடுதல் லாபம் கிடைக்கும். நல்ல வடிகால் வசதி கொண்ட செம்மண் அல்லது வண்டல் மண்ணில், 15லிருந்து, 39 டிகிரி வரை வெப்பநிலை உள்ள இடத்தில் கோகோ நன்கு வளரும். இரண்டு தென்னை நடுவில், ஒரு வரிசையாக குறைந்தது, 10 அடி இடைவெளி விட்டு கோகோ நடவு செய்ய வேண்டும். நடவு செய்தவுடன் மண்ணின் தன்மைக்கேற்ப நீர்பாசனம் செய்ய வேண்டும். சொட்டு நீர் பாசனம் மிகவும் சிறந்தது. கோகோவின் முக்கிய தண்டான சுப்பான் மேல்நோக்கி வளர்ந்து குறிப்பிட்ட உயரத்துக்கு வந்த பின், குடை போல் பிரியும். இதை ஜார்கட்டு என்பர். ஜார்கட்டுக்கும் கீழே முளைத்து வரும் கிளைகளை நீக்கி விட வேண்டும். பருவ காலங்களில் ஜார்கட்டில் இருந்து, ஒரு அடி அளவுக்கு கிளைகளில் உள்ள பக்க கிளைகளை அகற்றி சூரிய ஒளி ஜார்க்கட்டில் படுமாறு வழி வகை செய்ய வேண்டும். கோகோ நடவு செய்த மூன்று ஆண்டுகளுக்கு பின், பருவமழை காலங்களில் இவ்வாறு கவாத்து செய்ய வேண்டும். நன்கு முதிர்ந்த காய்கள் மஞ்சள் நிறமாக மாறும் போது அறுவடை செய்ய வேண்டும். தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக பரப்பில் தென்னை சாகுபடி செய்வதால், விவசாயிகள் தென்னையில் ஊடுபயிராக கோகோ சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம்.

---

**மாடு விற்பனை ஈரோட்டில் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : மே 15,2011,01:28 IST

ஈரோடு: ஈரோடு கருங்கல்பாளையத்தில் நேற்று முன்தினம் நடந்த மாட்டுச் சந்தையில், வெளி மாநில வியாபாரிகள் வருகை அதிகத்துள்ளது. ஈரோடு கருங்கல்பாளையத்தில் வியாழனன்று மாட்டுச் சந்தை நடக்கிறது. நடப்பு வாரம் சந்தைக்கு ஜெர்ஸி, சிந்து ரக மாடுகள் மற்றும் எருமைகள் விற்பனை வந்தன. 400 சிந்துவகை பசு மாடுகளும், 350 எருமைகளும் விற்பனையானது. ஈரோடு மாட்டுச் சந்தை மேலாளர் ராஜேந்திரன் கூறியதாவது: கறவை மாடு வாங்க, கேரளா, ஆந்திரா மாநில அரசுகள் மக்களுக்கு கடன் வழங்குவதால், அப்பகுதியில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வருகின்றனர். ஜெர்ஸி மற்றும் சிந்து வகை பசுமாடுகள் 12 ஆயிரம் ரூபாய் முதல் 28 ஆயிரம் ரூபாய் வரையும்,

எருமை 17 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரையும் விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

---

**கண்ணுக்கு விருந்தாக தயாராகும் பூங்கா:தோட்டக்கலை நிர்வாகம் சிறப்பு ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : மே 16,2011,00:16 IST

ஊட்டி : பார்வையாளர்களை கவரும் வகையில், ஊட்டி தாவரவியல் பூங்கா மலர் கண்காட்சியில், சிறப்பு ஏற்பாடு செய்யப்பட உள்ளன. கோடை சீசனை முன்னிட்டு, ஊட்டியிலுள்ள சுற்றுலா ஸ்தலங்களில், பார்வையாளர்கள் குவிந்து வருகின்றனர். ஊட்டி தாவரவியல் பூங்காவில், வரும் 20, 21, 22ம் தேதிகளில், 115வது மலர் கண்காட்சி நடக்கிறது. பார்வையாளர்களை கவர, பூங்காவில், சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சிறந்த தனியார் பூங்காவுக்கான போட்டியில் 212 பேரும், சிறந்த தோட்டக்கலை காட்சிப் பொருட்களுக்கான போட்டியில் 200 பேரும் பங்கேற்கின்றனர். கண்காட்சி முகப்பு வாயிலில், ஆர்க்கிட்ஸ், கார்னேசன், ஹெலிகோனியா, அஸ்டிரோமரியா உட்பட மலர்களால் அலங்கரிக்கப்பட உள்ளது. தவிர, 15 ஆயிரம் கார்னேஷன் மலர்களை கொண்டு, 15 அடி உயரத்தில் "கிரிக்கெட் உலக கோப்பை'யும், 10 அடி உயரம், 15 அடி நீளத்தில் கார்னேஷன் மலர்களால் "கங்காரு குட்டி', 300 வகையான மலர் அலங்காரங்களை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 15 ஆயிரம் மலர் தொட்டிகளில் வளர்க்கப்பட்ட சால்வியா, பிளாக்ஸ், பேன்சி, ஆஸ்டர், ஆண்டிரைசம், மெரிகோல்டு, டேலியா முதலான செடிகளில் மலர்ந்துள்ள மலர்கள், காட்சிக்கு வைக்கப்பட உள்ளன. போட்டியாளர்கள் கொண்டு வரும் 150 வகையான மலர்கள், 1,500 மலர் தொட்டிகளில் காட்சிப்படுத்தப்பட உள்ளன. சிறப்பம்சமாக, 16 அடி நீளம், 10 அடி அகலத்தில் மலர் "கார்பெட்', நீலகிரி மாவட்ட தோட்டக்கலை வளத்தை சித்தரிக்கும் வகையில், மலர்கள் மட்டுமின்றி, காய்கறிகள், பழங்கள், மூலிகை வகைகள் மற்றும் வாசனை திரவியங்கள், விவசாயிகளால் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன; இதற்கென 10 பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு, 60 சுழற்கோப்பைகள், 650 பரிசுக் கோப்பைகள், 50 ஆயிரத்துக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட உள்ளது. முக்கிய இடங்களில் கவுன்ட்டர்கள்:ஊட்டி தாவரவியல் பூங்காவில், கண்காட்சி நடக்கும் நாட்களில், நுழைவுக் கட்டணத்தை, தோட்டக்கலைத் துறையினரே

இம்முறையும் வசூலிக்க முடிவு செய்துள்ளனர். பெரியவர்களுக்கு 20 ரூபாய், சிறியவர்களுக்கு 10 ரூபாய், வீடியோ காமிராவுக்கு 75 ரூபாய், போட்டோ காமிராவுக்கு 30 ரூபாய் என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கூட்ட நெரிசலை தவிர்க்க, ஊட்டி பஸ் ஸ்டாண்ட், முக்கிய ஓட்டல்கள், ஆவின் வளாகம் ஆகிய இடங்களில் டிக்கெட் கவுன்ட்டர்கள் அமைக்கப்படுகின்றன.

---

**நெல் ஆராய்ச்சி நிலையத்தில் மரங்கொல்லி மருந்து விற்பனை**

பதிவு செய்த நாள் : மே 15,2011,01:23 IST

கும்பகோணம்: கும்பகோணம் அருகே ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராஜ் தனது செய்திக்குறிப்பில் கூறியதாவது: தற்போது குறுவை சாகுபடிக்கான நெல் நாற்றங்கால் தயாரிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். நாற்றங்காலில் விதைக்கும் முன்பாக விதை நேர்த்தி செய்வது அவசியம். விதை நேர்த்தி செய்வதன் மூலம் நெல்லில் விதைகள் மூலம் பரவும் நோய்களை எளிதாகக் கட்டுப்படுத்த இயலும். நோய் எதிர் உயிரியான சூடோமோனாஸ் புளாரசன்ஸ் பாக்டீரியாவை ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் என்ற அளவில் ஒரு லிட்டர் நீரில் கலந்து குறைந்தபட்சம் 12 மணி நேரம் ஊறவைத்து விதைக்க வேண்டும். எட்டு செண்ட் நாற்றங்காலுக்கு 600 கிராம் மற்றும் நடவு வயலில் ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் சாண எரு அல்லது மணலுடன் கலந்து இடுவதால் பயிர் வளர்ச்சி அதிகரிக்கிறது. நோய் தாக்குதல் குறைகிறது. விதை நேர்த்திக்கு தேவையான தரமான சூடோமோனாஸ் புளாரசன்ஸ் பாக்டீரியா, ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ 75 ரூபாய். தேவைப்படும் விவசாயிகள் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் வந்து பெறலாம். மேலும், கோவில் கோபுரங்கள், கட்டிடங்கள், கிணறுகள் மற்றும் பாசன வாய்க்கால்களில் வளர்ந்துள்ள பயனற்ற மரங்களை அழிக்க உதவும் மரங்கொல்லி மருந்து ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு லிட்டர் மரங்கொல்லி மருந்தின் விலை 600 ரூபாயாகும். குறைந்த பட்சம் 200 மிலி அளவில் கிடைக்கும். தேவைப்படுவோர் ஆராய்ச்சி நிலையத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

தினத் தந்தி

## பருத்தி ஏற்றுமதி உச்சவரம்பை உயர்த்துவது குறித்து பரிசீலனை

## மத்திய வர்த்தக அமைச்சக செயலாளர் தகவல்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
மும்பை

பருத்தி ஏற்றுமதிக்கான உச்சரம்பை உயர்த்துவது குறித்து அதிகாரம் பெற்ற அமைச்சர்களின் குழு ஒன்று விரைவில் முடிவு செய்யும் என மத்திய தொழில் மற்றும் வர்த்தக துறையின் செயலாளர் ராகுல் குல்லார் தெரிவித்தார். தற்சமயம் 55 லட்சம் பொதிகள் வரை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. (ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தி கொண்டதாகும்).

உற்பத்தி மதிப்பீடு

கடந்த 2009–10 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டில் 2.95 கோடி பொதிகள் பருத்தி உற்பத்தியாகி உள்ளது. இது, நடப்பு 2010–11 பருவத்தில் 3.25 கோடி பொதிகளாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பருத்தி சாகுபடி பரப்பளவு அதிகரித்து வருவதே இதற்கு காரணமாகும். சில அமைப்புகள் பருத்தி உற்பத்தி 3.50 கோடி பொதிகளாக அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது என முன்னர் தெரிவித்திருந்தன.

மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா, அக்டோபர் மாத அறுவடைக்குப் பின்னர் கூடுதல் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பது குறித்து முடிவு செய்யும் என கடந்த ஏப்ரல் மாதத்தில் தெரிவித்திருந்தார். இன்றைய நிலையில் தற்போதைய மதிப்பீடுகளுக்கு மாறாக பருத்தி உற்பத்தி 5 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள (55 லட்சம் பொதிகள்) ஏற்றுமதி அளவு கூட எட்டப்பட வாய்ப்பில்லை என சில தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச அளவில், பருத்தி உற்பத்தியில் நம் நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. பருத்தி ஏற்றுமதியைப் பொறுத்தவரை அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. உலக பருத்தி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு சுமார் 17 சதவீதமாக உள்ளது. நம் நாட்டில் ஏறக்குறைய ஒரு கோடி

*ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.*

*தென் மாநிலங்கள்*

*நாடு முழுவதுமாக பருத்தி சாகுபடி பரப்பளவு அதிகரித்து வரும் நிலையில், கடந்த சில ஆண்டுகளாக, தமிழ்நாட்டில் பருத்தி பயிரிடும் பரப்பளவு சரிவடைந்து வருவதாக தெரிகிறது. நாட்டின் மொத்த பருத்தி உற்பத்தியில் தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய தென் மாநிலங்களின் பங்களிப்பு, ஒட்டுமொத்த அளவில் 7 சதவீதமாக உள்ளது.*

---

# கண்காட்சிக்கு தயார் நிலையில் மலர்கள்



ஊட்டி தாவரவியல் பூங்காவில் வருகிற 20-ந் தேதி முதல் 3 நாட்கள் மலர் கண்காட்சி நடக்கிறது. இதையொட்டி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன. நடவு செய்யப்பட்ட செடிகளில் தற்போது பூக்கள் பூத்து குலுங்குகின்றன. இந்த மலர் தொட்டிகள் கண்காட்சி நாட்களில் சுற்றுலா பயணிகளின் பார்வைக்காக இன்று (திங்கட்கிழமை) மலர் மாடத்தில் அடுக்கும் பணி நடைபெற உள்ளது.

---

## *கோத்தகிரி காய்கறி கண்காட்சியை 15 ஆயிரம் பேர் கண்டுகளித்தனர்*

*கோத்தகிரி, மே.16–*

*கோத்தகிரியில் 2 நாட்கள் நடைபெற்ற காய்கறி கண்காட்சியை மொத்தம் 15 பேர் கண்டு*

ரசித்தனர்.

கோடை சீசன்

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் களை கட்டியுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் அதிகளவு வருகை தருகிறார்கள். சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கு ஊட்டியில் கோடை விழா நடைபெற்று வருகிறது. மேலும் கடந்த 7, 8–ந் தேதிகளில் ரோஜா கண்காட்சி நடத்தப்பட்டது. கோடை சீசனின் அடுத்த நிகழ்ச்சியாக கோத்தகிரியில் காய்கறி கண்காட்சி நடைபெற்றது. எப்போதும் ஆண்டு தோறும் கடைசி வாரத்தில் நடைபெறும் இந்த கண்காட்சி, சமீபத்தில் நடந்த சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு முன்பாகவே நடத்தப்பட்டது.

காய்கறி கண்காட்சி

கோத்தகிரி நேரு பூங்காவில் நேற்று முன்தினம் 4–வது காய்கறி கண்காட்சியை மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். கண்காட்சி யில் காய்கறி களால் பல்வேறு அலங்காரங்கள், சிற்பங்கள் செய்யப்பட்டு இருந்தன.

பூங்கா நுழைவு வாயிலில் சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகிய வண்ண குடைமிளகாய்களில் வரையப்பட்ட இந்திய வரைபடம் மற்றும் அனைத்து காய்கறிகளினால் உருவாக்கப் பட்ட கோபுரம், ராட்சத வடிவிலான பீட்ரூட் போன்றவை சுற்றுலா பயணி களை பெரிதும் கவர்ந்தது. மேலும் பாகற்காய்களால் உருவாக்கப்பட்ட முதலை சுற்றுலா பயணிகள் பலரும் கண்டுகளித்தனர். இது மட்டுமின்றி அரங்குகளில் வைக்கப்பட்டு இருந்த, காய்கறி களால் உருவாக்கப்பட்ட பல்வேறு சிற்பங்களையும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர்.

15 ஆயிரம் பேர்

கோத்தகிரி நேரு பூங்காவில் நேற்றுமுன்தினம் நடந்த காய்கறி கண்காட்சியை மொத்தம் 6 ஆயிரம் பேர் கண்டு ரசித்தனர். நேற்று ஒரே நாளில் மட்டும் 9 ஆயிரம் பேர் கண்டு ரசித்தனர். இதன் மூலம் 2 நாட்கள் நடந்த காய்கறி கண்காட்சியை மொத்தம் 15 பேர் கண்டு ரசித்தனர்.

நேரு பூங்காவில் நேற்று மாலை காய்கறி கண்காட்சி நிறைவு விழா நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் குப்புசாமி தலைமை தாங்கினார். தோட்டக்கலை துறை துணை இயக்குனர் தர்மலிங்கம் சிறப்புரையாற் றினார். தொடர்ந்து பல்வேறு பிரிவுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் குப்புசாமி வழங்கினார். மேலும் தோட் டக்கலை துறையின் சார்பில் சிறந்த அரங்குகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

விழாவில் 8 மாவட்டங்களை சேர்ந்த தோட்டக்கலை துறை உதவி இயக்குனர்கள், அதிகாரி கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக தோட்டக்கலை துறை இணை இயக்குனர் ஆல்தொரை வரவேற்று பேசினார். முடிவில் உதவி இயக்குனர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

---